# இரட்டிப்பான நன்மை

**இரட்டிப்பான நன்மையைத் தருவேன். இன்றைக்கே தருவேன். சகரியா 9 : 12**

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

கர்த்தர் தேமானியனான எலிப்பாசை நோக்கி, உன் மேலும் உன் இரண்டு சிநேகிதர் மேலும் எனக்குக் கோபம் மூளுகிறது. என் தாசனாகிய யோபு பேசினதுபோல் நீங்கள் என்னைக் குறித்து நிதானமாய் பேசவில்லை. ஆதலால் . . . யோபினிடத்தில் போய், உங்களுக்காக சர்வாங்க தகனபலிகளை இடுங்கள். என் தாசனாகிய யோபுவும் உங்களுக்காக வேண்டுதல் செய்வான். நான் அவன் முகத்தைப் பார்த்து உங்களை உங்கள் புத்தியீனத்துக்குத் தக்கதாக நடத்தாதிருப்பேன் என்றார். எலிப்பாசும், பில்தாதும், சோப்பாரும் போய் கர்த்தர் தங்களுக்கு சொன்னபடியே செய்தார்கள். அப்பொழுது கர்த்தர் யோபின் முகத்தைப் பார்த்தார்.

யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபொழுது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். யோபுவுக்கு முன் இருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் **இரண்டத்தனையாய்க் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார்.**

இதை வாசிக்கும் அருமையான சகோதரனே, சகோதரியே கர்த்தரைக் குறித்து நிதானமாய் பேசாதவர்கள், வீண்வார்த்தைகளை அலப்புகிறவர்கள், சத்தியம் தெரியாதவர்கள் இவர்கள் மேல் தேவ கோபம் மூளாதிருக்க அவர்களுக்காக விண்ணப்பம் செய்யவேணடும். உன்னையும், என்னையும் தான் தேவன் விரும்புகிறார். இவர்களுக்காக ஜெபம் செய்ய இன்று தீர்மானம் செய்வீர்களா ? அப்படி செய்யும்பொழுது, **இரட்டிப்பான நன்மையைத் தருவேன். இன்றைக்கேத் தருவேன்.**

– என்ற வாக்குத்தத்தம் நிறைவேறுவதை காண்பீர்கள். யோபு வேண்டுதல் செய்த பொழுது, முதலாவது அவன் சிறையிருப்பை மாற்றினது போல, கர்த்தர் உன் சிறையிருப்பை மாற்றுவார். அதோடு இரண்டத்தனையாக ஆசீர்வாதங்களினால் நிரப்புவார். அல்லேலூயா.

எலியா, எலிசாவை நோக்கி, நீ இங்கே இரு கர்த்தர் என்னை யோர்தானுக்கு அனுப்புகிறார் என்றான். அதற்கு நான் உம்மை விடுகிறதில்லை என்று 3 – ஆம் முறையும் கூறினான்.

அப்படியே இருவரும் போனார்கள். எலியா தன் சால்வையை எடுத்து முறுக்கி தண்ணீரை அடித்தான். அது இருபக்கம் பிரிந்தது. அவர்கள் இருவரும் உலர்ந்த தரை வழியாய் அக்கரைக்குப் போனார்கள். எலியா, எலிசாவை நோக்கி நான் உன்னை விட்டு எடுத்துக் கொள்ளப் படுமுன்னே நான் உனக்கு செய்யவேண்டியது என்ன கேள் என்றான்.

அதற்கு எலிசா **“உம்மிடத்திலுள்ள ஆவியின் வரங்கள் இரட்டிப்பாய் கிடைக்கும்படி வேண்டுகிறேன்.” என்றான்.** உன்னை விட்டு நான் எடுத்துக் கொள்ளப்படுகிகையில் என்னை நீ கண்டால் உனக்குக் கிடைக்கும் என்றான். எலியா சுழல் காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான். எலிசா, எலியாவின் மேலிருந்து விழுந்த சால்வையை எடுத்துத் திரும்பிப்போய், யோர்தானின் கரையிலே நின்று சால்வையைப் பிடித்து, எலியாவின் தேவனான கர்த்தர் எங்கே என்று சொல்லித் தண்ணீரை அடித்தான். அது இரு பக்கமாகப் பிரிந்ததினால் எலிசா இக்கரைப்பட்டான்.

அருமையானவர்களே, ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளும் படியாக, எலிசா, எலியாவை விடாப்பிடியாக பின் தொடர்ந்து பிடித்துக் கொண்டான். மூன்று முறை எலியா தனியாக செல்ல விரும்பினாலும், எலிசா விடவில்லை. இன்று **நீயும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விடாப்பிடியாய் பிடித்துக் கொள்.**

மேலும், நான் உனக்கு செய்ய வேண்டியது என்ன கேள் என்று எலியா சொன்னபொழுது, பொன்னையோ, பொருளையோ எலிசா கேட்கவில்லை. அதற்கும் பதிலாக, **“ உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய் கிடைக்கும்படி வேண்டுகிறேன்”** என்றார்.

சகோதரனே, சகோதரியே ஆண்டவரிடம் நீ எதைக் கேட்டுக் கொண்டிருக்கிறாய். மேலேப் பார் உன் புலம்பல் என்ன ? ஆவியின் வரத்தை ஆண்டவரிடத்தில் கேட்கிறாயா ?

**இரட்டிப்பான நன்மையைத் தருவேன்.**
**இன்றைக்கே தருவேன்.**

என ஆவியானவர் கூறுகிறார்.

ஆனால் ஒன்று செய்யவேண்டும், எலிசா, எலியாவை விடாமல் பின் தொடர்ந்தது போல, நீயும் தொடரவேண்டும். அவரையே, மேல் நோக்கிப் பார்க்கவேண்டும். அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் சால்லையைப் போல் இறங்குவார். யோர்தான் பிரிந்தது போல, அநேகருடைய கட்டுகளை கர்த்தர் அவிழ்ப்பார். **இரட்டிப்பான நன்மையை இன்றைக்கே காண்பாய்.** ஆமென்.